

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்பென்னாத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, துரிஞ்சாபுரம் ஊராட்சி ஒன்றியம் வெளுங்கனந்தல் ஊராட்சியில் விவசாயிகள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை தமிழ்நாடு சட்டபேரவைத் துணைத் தலைவர் கு.பிச்சாண்டி துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் வி.பி.அண்ணாமலை, இராமஜெயம், பொதுக் குழு உறுப்பினர் மோட்டூர் பாலு, சகாதேவன், தமயேந்தி ஏழுமலை, இலக்கிய அணி துணை அமைப்பாளர் மங்கலம் பிரபாகரன், துரிஞ்சாபுரம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் அன்பு, கருமராப்பட்டி முன்னாள் தலைவர் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், கழக பல்வேறு அணி அமைப்பாளர்கள், கழக உடன் பிறப்புகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ‘அரசியல் சட்டமே’ அனைத்தையும் இயக்கும் வழிகாட்டு நெறிமுறை!

# அனைத்துப் பிரச்சினைகளிலும் உச்சநீதிமன்றத்தின் அணுகுமுறை இந்த வழியில் அமைவதே நல்லது!

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் பாராட்டு!

சென்னை, மே 21-

‘அரசியல் சட்டமே’ அனைத்தையும் இயக்கும் வழிகாட்டு நெறிமுறை எனவும் அனைத்துப் பிரச்சினைகளிலும் உச்சநீதிமன்றத்தின் அணுகுமுறை இந்த வழியில் அமைவதே நல்லது எனவும் ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் தெரிவித்துள்ளது.



தீக்கதிர்

2025 மே 20 செவ்வாய்க்கிழமை

அரசியல் சட்டம் வழிகாட்டட்டும்

நீதித்துறையோ, அரசோ, நாடாளுமன்றமோ உயர்வானவை அல்ல; இந்தியாவின் அரசமைப்புச் சட்டமே உயர்வானது என்று உச்சநீதிமன்றத்தின் 52ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள பி.ஆர்.கவாய் கூறியுள்ள கருத்து இன்றைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

நாடாளுமன்றம், நீதித்துறை, அரசு ஆகிய மூன்று தூண்களும் அரசமைப்புச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும். மூன்று தூண்களும் சரிசம மானவை. அவை மூன்றும் பரஸ்பரம் மரியாதை அளித்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஒன்றிய அரசின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மே மாதம் 13ஆம் தேதி உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்வி...

நீதித்துறையோ, அரசோ, நாடாளுமன்றமோ உயர்வானவை அல்ல; இந்தியாவின் அரசமைப்புச் சட்டமே உயர்வானது என்று உச்சநீதிமன்றத்தின் 52ஆவது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள பி.ஆர். கவாய் கூறியுள்ள கருத்து இன்றைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

நாடாளுமன்றம், நீதித் துறை, அரசு ஆகிய மூன்று தூண்களும் அரசமைப்புச் சட்டத்தின்படி செயல்பட வேண்டும். மூன்று தூண்களும் சரிசம மானவை. அவை மூன்றும் பரஸ்பரம் மரியாதை அளித்து செயல்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

ஒன்றிய அரசின் ஆலோசனையின் பேரில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மே மாதம் 13ஆம் தேதி உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்விகளை எழுப்பி குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். தமிழ்நாடு மாநில அரசு தொடர்ந்த வழக்கில் ஆளுநரின் அதிகாரம் மற்றும் சட்டமுன் வரைவுகளுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான காலவரம்பை ஆளுநர் மற்றும் குடியரசுத் தலைவருக்கு உச்சநீதிமன்றம் நிர்ணயித்துள்ள நிலையில் குடியரசுத் தலைவர் பதவியைப் பயன்படுத்தி ஒன்றிய அரசு இந்த கேள்விகளை எழுப்பியுள்ளது.

குடியரசுத் தலைவர் மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் பதவிகளையும் தவறாகப் பயன்படுத்த ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசு தயங்குவதில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து ஆய்வு நடத்த அமைக்கப்பட்ட குழுவின் தலைவ ராக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்தை தலைவராகவும் நியமித்தது. ஒன்றிய அரசின் விருப்பத்திற்கேற்பவே அந்தக் குழுவும் அறிக்கையை அளித்துள்ளது.

இதுஒருபுறமிருக்க, குடியரசுத் தலைவரின் பெயரால் எழுப்பப்பட்டுள்ள இந்த கேள்விகள் ஒன்றிய அரசினால் எழுப்பப்பட்ட கேள்விகளே ஆகும். இந்த நிலையில் உச்சநீதிமன்றத்திற்கு 14 கேள்விகளை எழுப்பி ஜனாதிபதி அனுப்பியுள்ள குறிப்பை எதிர்க்க வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 8 மாநில முதல்வர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

உச்சநீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு தமிழ்நாட்டிற்கு மட்டும் பொருந்துவதல்ல. அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தக் கூடியது என்று அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் சட்டம் வழங்கியுள்ள அதிகாரத்தின் அடிப்படையிலேயே உச்சநீதிமன்றம் ஆளுநர்களின் அடாவடி தொடர்பான வழக்கில் தீர்ப்பு வழங்கியுள்ளது. இதை நீர்த்துப் போகச் செய்ய ஒன்றிய அரசு முயல்வதன் வெளிப்பாடே குடியரசுத் தலைவர் பெயரால் அனுப்பப்பட்டுள்ள குறிப்பாகும். நாடாளுமன்றம், அரசு மற்றும் நீதித்துறை ஆகிய துறைகள் அனைத்தும் அரசியல் சட்டத்தின்படியே செயல்பட வேண்டியவை. அரசியல் சட்டமே அனைத்தையும் இயக்கும் வழிகாட்டு நெறிமுறையாகும். இதை புதிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி குறிப்பிட்டுள் ளது வரவேற்கத்தக்கது. அனைத்துப் பிரச்சினைகளிலும் உச்சநீதிமன்றத்தின் அணுகுமுறை இந்த வழியில் அமைவது நல்லது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# திருவில்லிபுத்தூர் தொ.மு.ச., எல்.சங்கர் இல்ல மணவிழா!

## டாக்டர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி.- முன்னணியினர் வாழ்த்து!

திருவில்லிபுத்தூர், மே 21-

திருவில்லிபுத்தூர் அ.போ.க தொ.மு.ச பேரவை உறுப்பினர் எல். சங்கர் - மணிமேகலை இல்ல திருமண வரவேற்பு விழா திருவில்லிபுத்தூர் ஒன்றிய செயலாளர் முன்னாள் ஒன்றிய சேர்மன் மல்லி கு.ஆறுமுகம் தலைமையில் திருமண மணமக்கள் ச.லட்சுமணன் (எ) தீபன் பா.மணிமேகலை

நாளை (22.5.2025- வியாழன்) மாலை திருவில்லிபுத்தூர் வன்னியம்பட்டி விலக்கு அக்ஷயா திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

நிகழ்ச்சிக்கு தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி டாக்டர் ராணி ஸ்ரீகுமார் எம்.பி., திருவில்லிபுத்தூர் நகர செயலாளர் ஜி.அய்யாவுப்பாண்டியன், திருவில்லிபுத்தூர் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் நகர் மன்ற தலைவர் தங்கம் ரவி கண்ணன் மற்றும் விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளரும் மல்லி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஆ.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

விருதுநகர் மாவட்ட தொ.மு.ச. செயலாளர் ஆர்.ராஜசெல்வம் தலைவர் வி.பார்த்தீபன், பொருளாளர் ஏ.திருவேட்டை போத்தி துணைச்செயலாளர் ஐ.சசிகுமார் மற்றும் திருவில்லி புத்தூர் ஒன்றிய அவைத்தலைவர் செல்வ.காளிதாசன், துணைச்செயலாளர்கள் ஆர்.தேவதாஸ், சி.முத்துக் கிருஷ்ணன், ஆ.இந்திரா பொருளாளர் பா.முருகன், மாவட்ட பிரதிநிதி கள் சீ.தமிழ்செல்வன் அ.அய்யக்கோன், பா.பார்த்தீபன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

மேலும் விழாவில் திருவில்லிபுத்தூர் அ.போ.க தொ.மு.ச நிர்வாகிகள் செயலாளர் ஆர்.லிங்கராஜ் தலைவர் ஏ.தென்னரசு பொருளாளர் எம்.கருணாநிதி துணைத்தலைவர் எஸ்.காளிதாசன் துணைச் செயலாளர் வி.ஆரோக்கிய சகாயராஜ் மற்றும் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பா.செல்வக்குமார் முன்னாள் கவுன்சிலர் மு.கந்தலட்சுமி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் ஜெ.பொன்ராஜ் ஒன்றிய கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் கே.கலைமணி மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை அமைப்பாளர் கு.செந்தில்குமார் மாவட்ட ஆதிதிராவிடர் நலக் குழு துணை அமைப்பாளர் ரா.பாஸ்கர் முன்னாள் ஒன்றிய பொருளாளர்கள் எம்.பொன்னுச்சாமி கே.சின்னத்தம்பி முன்னாள் மாவட்ட கவுன்சிலர் எஸ் கணேசன் முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் வி.கணேசன் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் அக்ஷயா செந்தில் குமார் மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் பி.பிச்சைக்கனி ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அணி மகளிர் அமைப்பாளர் க.சீதாலட்சுமி ,

ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் ஏ.ஆரோக்கியமேரி ஒன்றிய பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பி.பார்த்தீபன் முன்னாள் கவுன்சிலர் சுந்தரி கோவிந்தராஜ் மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் பி.செந்தில் குமார் கிருஷ்ணன்கோவில் செயலாளர் இ.பாவ் கண்ணன்,

ஒன்றிய மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பரமேஸ்வரி திருவில்லி புத்தூர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பா.முத்துக்குமார் டி.அகிலன் விக்னேஷ் க.சதீஷ்குமார் நா. இராஜதுரை மற்றும் கிளைச் செயலாளர்கள் எஸ்.மகாதேவன் வி.உத்திரக்குமார் எல்.அய்யனார் கு.பெத்தணன் ஜி.ராஜமன்னார் கு.மகா லிங்கம் மா.முனியாண்டி ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

ஓ.வெற்றி வேல்முருகன் கே.பாபு சரவணன் ஆகியோர் நன்றி கூறுகிறார்கள் மற்றும் நிகழ்ச்சியில் திருவில்லிபுத்தூர் ஒன்றிய கழக உடன்பிறப்புகள் மற்றும் படிக்காசு வைத்தான்பட்டி ஊராட்சி கழக கண்மணிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காரைக்குடி இராம. சுப்பையா
### மே 21 (1997)



சுயமரியாதை இயக்கத் தொண்டர். கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்து உறுப்பினர். வைதீகக் கோட்டையான காரைக்குடிப் பகுதியில் திராவிட இயக்கத்தைப் பரப்பியவர்.

1953ஆம் ஆண்டு நடைபெற்ற கல்லக்குடிப் போராட்டத்தில் இரண்டாம் அணியின் தலைவராகப் பொறுப்பேற்று, இரயில் மறியல் செய்து, கைதாகி, தலைவர் கலைஞர் அவர்களுடன் திருச்சி சிறை புகுந்தவர்.

1972ஆம் ஆண்டு முதல் ஆறாண்டு காலம் தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக பணியாற்றியவர்.

90 வயது வரை சுயமரியாதைக்காரராகவும், தி.மு.கழகத்தின் தொண்டராகவும் வாழ்ந்து மறைந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

சட்டமன்றத் தேர்தல் : சென்னை – காஞ்சிபுரம் – திருவள்ளூர்

# மாவட்டச் செயலாளர்கள் கவனத்திற்கு!

## கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. வேண்டுகோள்!



சென்னை தெற்கு, தென்மேற்கு, கிழக்கு, மேற்கு, வடக்கு, வடகிழக்கு, திருவள்ளூர் கிழக்கு, மத்திய, மேற்கு, மற்றும் காஞ்சிபுரம் வடக்கு ஆகிய கழக மாவட்ட செயலாளர்களின் கவனத்திற்கு.

சட்டமன்ற தொகுதி வாரியாக மேற்கொள்ளப்பட வேண்டிய தேர்தல் பணிகள் குறித்த நிர்வாகிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சிகளின் விவரம்:

| வ. எண். | தேதி | கழக மாவட்டம் | சட்டமன்ற தொகுதி | நேரம் |
|---|---|---|---|---|
| 1. | 22-05-2025 | சென்னை மேற்கு | 1. அண்ணா நகர்<br>2. சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி<br>3. ஆயிரம் விளக்கு | 10.00 AM<br>11.00 AM<br>12.00 PM |
| 2. | 22-05-2025 | சென்னை தென் மேற்கு | 1. மயிலாப்பூர்<br>2. தி. நகர். | 02.00 PM<br>03.00 PM |
| 3. | 26-05-2025 | சென்னை வடக்கு | 1. பெரம்பூர்<br>2. ஆர்.கே. நகர்<br>3. இராயபுரம் | 10.30 AM<br>11.30 AM<br>12.30 PM |
| 4. | 26-05-2025 | சென்னை கிழக்கு | 1. எழும்பூர்<br>2. துறைமுகம்<br>3. திரு.வி.க. நகர் | 03.30 PM<br>04.30 PM<br>05.30 PM |
| 5. | 27-05-2025 | சென்னை வடகிழக்கு | 1. மாதவரம்<br>2. திருவொற்றியூர் | 11.00 AM<br>12.00 PM |
| 6. | 05-06-2025 | திருவள்ளூர் மத்திய | 1. பூந்தமல்லி<br>2. ஆவடி | 11,00 AM<br>12.00 PM |
| 7. | 05-06-2025 | திருவள்ளூர் மேற்கு | 1. திருத்தணி<br>2. திருவள்ளூர் | 02.00 PM<br>3.00 PM |
| 8. | 05-06-2025 | திருவள்ளூர் கிழக்கு | 1. கும்மிடிப்பூண்டி<br>2. பொன்னேரி | 04.00 PM<br>05.00 PM |
| 9. | 06-06-2025 | காஞ்சிபுரம் வடக்கு | 1. ஸ்ரீபெரும்புதூர்<br>2. செங்கல்பட்டு<br>3. திருப்போரூர் | 10,30 AM<br>11.30 AM<br>12.30 PM |
| 10. | 07-06-2025 | காஞ்சிபுரம் வடக்கு | 1. தாம்பரம்<br>2. பல்லாவரம்<br>3. ஆலந்தூர் | 10,30 AM<br>11.30 AM<br>12.30 PM |
| 11. | 09-06-2025 | சென்னை தெற்கு | 1. வேளச்சேரி<br>2. சோழிங்கநல்லூர் | 10,30 AM<br>11.30 AM |
| 12. | 09-06-2025 | சென்னை தெற்கு | 1. மதுரவாயல்<br>2. விருகம்பாக்கம்<br>3. சைதாப்பேட்டை | 03.30 PM<br>04.30 PM<br>05.30 PM |
| 13. | 10-06-2025 | சென்னை கிழக்கு | 1. வில்லிவாக்கம்<br>2. அம்பத்தூர்<br>3. கொளத்தூர் | 10,30 AM<br>11.30 AM<br>12.30 PM |

மேற்கண்ட தேதிகளில் நடைபெறும் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டங்களில், சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட நிர்வாகிகள், மாநகர செயலாளர்கள், வட்ட, பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மட்டுமே கலந்து கொள்வதற்கு மாவட்ட கழகச் செயலாளர்கள் ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**ஆ.இராசா எம்.பி.,**
கழக துணைப் பொதுச் செயலாளர்

## மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் பங்கேற்பு!

# தூத்துக்குடி மாநகரக் கழக பிரதிநிதிகள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, மே 21-

தூத்துக்குடி மாநகர பிரதிநிதிகள் கூட்டம் 23ஆம் தேதி அன்று நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர்-அமைச்சர் பி. கீதாஜீவன் மற்றும் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர். ஆனந்த சேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.கீதாஜீவன் மற்றும் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-



தூத்துக்குடி மாநகர தி.மு.க பிரதிநிதிகள் கூட்டம் 23.05.2025-வெள்ளிக்கிழமை அன்று, மாலை 6 மணி, இடம்: கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் மாநகர அவைத்தலைவர். கோ. ஏசுதாஸ் தலைமையில் நடைபெறுகின்றது.

கூட்டத்தில் தூத்துக்குடி மாநகரத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள் :

1.முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்து

2.தூத்துக்குடி மாநகரத்திற்கு உட்பட்ட 6 பகுதிகளிலும் BLC கூட்டம் நடத்துவது குறித்து.

3.26.05.2025 அன்று தூத்துக்குடி மாவட்ட தி.மு.க முன்னாள் செயலாளர் என்.பெரியசாமி அவர்களின் 8 -ம் ஆண்டு நினைவு தினம் - குறித்து.

4.கழக வளர்ச்சி பணிகள் - குறித்து.

5.இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

வேலூர் மாவட்டம் பேர்ணாம்பட்டு பேருந்து நிலையத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன் தலைமையில் ஒன்றிய அரசைக் கண்டித்து நடந்த தி.மு.க. பொதுக் கூட்டத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி. செழியன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். உடன் மாவட்ட அவைத்தலைவர் தி.அ. முகமதுசகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர்ஆனந்த், குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், பிரபு கஜேந்திரன், கே.ஜனார்த்தனன்,எம். டேவிட், சவுந்தரராஜன் ஆலியார்ஜ பேர்அகமத், யூ.ரவிக்குமார், கோ. முரளிபாஸ்கர், மாமன்ற உறுப்பினர் டீடா.சரவணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

